மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 34

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க
- இவை மொழிவளத்தை அதிகரிப்பதற்காக உருவாக்கப்பட்ட பயிற்சியாகும்

---

பகுதி 1

1. தொழுகள்வரை நம்பி ஏமாந்துவிடக்கூடாது என்பதில் தொழுகள்வர் என்பது
   (1) நயவஞ்சகர் (2) ஊதாரி (3) கோமாளி (4) கள்வர்கள்
2. அரிச்சந்திர மன்னனின் தியாகவாழ்க்கை பசுமரத்தாணி போல மக்கள் மனதில் பதிந்து விடுகின்றது. இங்கு பசுமரத்தாணி போல என்ற உவமைத்தொடரின் பொருள்
   (1) ஆழமாகப்பதிதல் (2) புரியாதுபோதல் (3) பசுமையாகபதிதல் (4) முழுமையின்றிபதிதல்
3. ஊர்க்கடனும் உள்ளங்கைச் சிரங்கும் போல என்ற உவமைத்தொடரின் பொருள்
   (1) புரியாதபுதிர் (2) நித்தியவேதனை (3) தீராப்பகை (4) ஒற்றுமை
4. வெளிப்படையாக தெரியாது மறைந்திருத்தல் என்ற பொருளைத் தரும் உவமைத்தொடர்
   (1) இலைமறை காய்போல
   (2) எள்ளும் எண்ணெயும் போல
   (3) உள்ளீடற்ற பதர்போல
   (4) ஓடும் புளியம்பழமும் போல
5. செல்வம் என்பது சிந்தையின் நிறைவு என்ற பழமொழிக்குப் பொருத்தமான பிறிதொருபழமொழி
   (1) ஆழமறியாது காலை விடாதே
   (2) போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து
   (3) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
   (4) காணி ஆசை கோடி கேடு

பகுதி 2

**1.** பின்வரும் வினாக்களுக் சுருக்கமாக விடை எழுதுக

01. " புத்தகத்தை எடுத்துவிட்டு வூட்டவாமனே"
    1. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
    2. வூட்டவா மனே என்ற பேச்சுவழக்குத் தொடரின் நியமவழக்கினை எழுதுக
02. "தண்கயமாடு மகளிரோடு கைபிணைத்து தழுவுவழீத் தழீஇ தூங்குவழித் தூங்கி"
    1. தண்கயம் என்பது யாது?
    2. இவ்வடிகள் இடம்பெற்ற பாடலை பாடியவர் யார்?
03. 'உண்பதுவும் உறங்குவதும் ஊர்க்கதைகள் பேசுவதும் பெண்கள் தொழிலாமென்று'
    1. இவ்விலக்கியத்தைப் பாடியவர் யார்?
    2. பெண்கள் தொழிலாக குறிப்பிடப்படுபவை எவை?
04. "இலவச நடமாடும் மருத்துவமுகாம் நாளை நடைபெறும்" என்ற தொடரில் இடம்பெறும் மயக்கத்தை நீக்கி எழுதுக.
05. நான் அப்பாவை பார்க்க கொழும்புக்குச்சென்றேன். என்ற கலப்புவாக்கியத்தில் தலைமைத்தொடரையும் சார்புத்தொடரையும் இனங்கண்டு எழுதுக
06. வேட்டை நாய் போல அவள் முன்னே ஓடிச்செல்கிறது நிழல் என்ற வாக்கியத்தின் எழுவாய் பயனிலையை எழுதுக
07. எங்கள் ஆசிரியர் தமிழ்ப்பாடத்தை சுவையாக கற்பித்தார் என்ற செய்வினை வாக்கியத்தை செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக